Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

21

<u>நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு), திருநெல்வேலி</u>
<u>மண்டலம், திருநெல்வேலி அவர்களின் நடவடிக்கைகள்</u>
பிறப்பிப்பவர் : திருமதி ஆ. மணிமேகலை, B.E.,

ந.க. எண் 6053/2019 திலிம3 நாள் 12.02.2020

பொருள் : கட்டிடம் - திருநெல்வேலி மண்டலம் - திருநெல்வேரி மாவட்டம் - அம்பாசமுத்திரம் வட்டம் - வாகைக்குளம் ஊராட்சி மற்றும் கிராமம் - நில அளவை எண் 103/1, 8-ல் 16265.00 சமீ பரப்பு கொண்ட மனையிடங்களில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் 15 பிளாக்குகளில் 480 குடியிருப்புகள் 17837.40 சமீ பரப்பளவில் தரைதளம் மற்றும் மூன்று தளங்கள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்ட கட்டிட அனுமதி வழங்கிட இசைவு மற்றும் மனை ஒப்புதல் வழங்கப்படுகிறது.

படிக்க :

1. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் கடிதம் ந.க. எண் 4114/A/உபொ(தி)/2017, நாள் 25.11.2019 மற்றும் 10.02.2020
2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 4367/2019 நஊ2, நாள் 31.10.2019
3. இவ்வலுவலக கடிதம் இதே எலன் நாள் 27.11.2019 மற்றும் 24.01.2020
4. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019
5. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 23371/2019 டிசிபி-6, நாள் 14.01.2020

ஆணை

திருநெல்வேரி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், வாகைக்குளம் ஊராட்சி மற்றும் கிராமம், நில அளவை எண் 103/1, 8-ல் 16265.00 சமீ பரப்பளவுள்ள மனையிடங்களுக்கு "ABCDEF மற்றும் PQRST" என எல்கையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனைகளில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் 15 பிளாக்குகளில் 480 குடியிருப்புகள் 17837.40 சமீ பரப்பளவில் தரைதளம் மற்றும் மூன்று தளங்கள் கொண்ட தொகுப்பு கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதற்கு கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கட்டிட அனுமதி வழங்கிட இசைவும் அளிக்கப்படுகிறது. கட்டிட அனுமதி இசைவளிக்கப்பட்ட வரைபடத்திற்கு **க.வ/ம (திலி) எண் 10அ, 10ஆ/2020** என எண்ணிடப்பட்டுள்ளது.

4/3/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

சிறப்பு நிபந்தனைகள் :

1. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி /திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி /திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
2. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
3. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/ developer and also the architects/ Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
4. உத்தேச கட்டட மனையிடத்தில் பொதுமக்களுக்கு எளிதில் தெரியும் வகையில் பலகை அமைத்து ஒப்புதல் வரைபடத்தின் படி, தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Set Back) வாகன நிறுத்தம், நகர் ஊரமைப்பு துறை ஒப்புதல் எண் /நாள், உள்ளாட்சி கட்டட அனுமதி எண் /நாள் மற்றும் அனைத்து விபரங்களும் குறிப்பிட்டு பார்வைக்கு வைத்தல் வேண்டும்.
5. உத்தேச கட்டுமானத்தின் மொத்த மேற்கூரைப்பரப்பில் 1/3rd பரப்பிற்கு குறையாத அளவில் Solar Energy System அமைக்கப்படல் வேண்டும்.
6. இடஅமைப்பு வரைபடத்தில் கண்டுள்ளவாறு Open Space Reservation பகுதியினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும். (The proposals of Tamil Nadu Slum Clearance Board (TNSCB) are Government agencies bound to form the roads, parks and hand them over to the local body at the end of execution of project)
7. This order is passed subject to the outcome of the Madras High Court Madurai Bench writ petition W.P. (MD) No. 8948 of 2019

4/3/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

நிபந்தனைகள் :

1. உத்தேச தொகுப்பு குடியிருப்பு கட்டுமானத்திற்கு Solar Assisted Water Heating System அமைப்பு அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகன நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றம் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தில் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும் அரசாணை எண் 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11.10.2002-ன் படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவுநீர், தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் தீயணைப்பு துறையின் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண் 341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.11.2004-ன் படி செப்டிக் டேங்கில் 'U' Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகாரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது உத்தேச நிலத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும்.
12. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act)-ன் படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.
13. கட்டிடம் கட்டப்படும்போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

நன்னிலை வரித்தொகை ரூ.48,600/- (ரூபாய் நாற்பத்து எட்டாயிரத்து அறுநூறு மட்டும்) அரசு கணக்கில் 07.02.2020-ல் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 4-ல் கண்டுள்ள அரசாணையின் படி காட்சி பலகை வைப்புத் தொகை (Display Board Deposit) ரூ.10,000/- 29.01.2020-ல் இவ்வலுவலக வங்கி கணக்கில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

4/3/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இதனை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அனுப்பிட உள்ளாட்சி நிர்வாக அதிகாரி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மனுதாரர் உள்ளாட்சியை அணுகிடவும், தனி அலுவலர், வாகைக்குளம் ஊராட்சி மேற்கொண்டு வரைபடத்துடன் உத்தரவினை மனுதாரருக்கு வழங்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
திருநெல்வேலி - 5.
12/02/2020

இணைப்பு
இரண்டு தொகுப்பு வரைபடங்கள்

பெறுநர்
தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்
வாகைக்குளம் ஊராட்சி / அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம்
திருநெல்வேலி மாவட்டம்

நகல்

1. நிர்வாக பொறியாளர்,
   தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்
   பெருமாள்புரம், திருநெல்வேலி - 7 } செயலாணை கடிதம் மட்டும்
2. தொழில் நுட்ப வைப்பறை - 1

4/3/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

25

வரைபட அங்கீகார அனுமதி உத்தரவு

அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம் வாகைக்குளம் ஊராட்சி மன்றத் தலைவர்

அவர்களின் நடவடிக்கைகள்

M. சண்முகநாதன் தனி அலுவலர் அவர்கள்

முன்னிலை :

எண் : 17. 2019/2020 - நாள் : 26.2.2020.

பொருள் : வரைபடம் அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம் வாகைக்குளம் ஊராட்சி

சர்வே / வீட்டு எண் .... கூடுதல் / புதிய வீடு கட்டிடம் / மராமத்து / கட்டுவதற்கு

வரைபட - அங்கீகாரம் அளித்து உத்தரவிடல் தொடர்பாக

பார்வை 1) அரசு ஆணை எண் 256 நாள் 18.8.97

2) திரு திருமதி நிர்வாக பொறியாளர்

தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியம்

விண்ணப்ப நாள் : திருநெல்வேலி

உத்தரவு

கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம் வாகைக்குளம் ஊராட்சி வாகைக்குளம் கிராமம் 01 வார்டு எண் .... வீட்டு எண் 103/1 1103/1 சர்வே எண் .... இடத்தில் 13007.17 சதுர மீட்டரில் கூடுதல் / புதிய வீடு / கட்டிடம் / கட்டிக்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது. பார்வையில் காணும் நபர் செலான் எண் நாள் மூலம் ரூ 13,96,737/- செலுத்தியுள்ளார்.

1. இந்த அனுமதி 26.2.2020 காலத்திற்கு 25.2.2024 தேதி முடிய அமுலில் இருக்கும்
2. இத்துடன் அங்கீகாரம் செய்து அனுப்பப்பட்டிருக்கும் வரைபடத்தின்படி கட்டிடம் கட்ட வேண்டும். மேற்படி வரைபடம் சம்பந்தப்பட்ட இடத்தில் அலுவலர்கள் பார்வையிடும்படி தொங்கலிட வேண்டும்.
3. இப்போது கட்டபோகும் கட்டிடத்தில் வேறு எந்த விதமான அபிவிருத்தியோ அல்லது மாறுதலோ செய்து கட்ட வேண்டுமானால், அதற்குரிய சீர்திருத்தப்பட்ட வரைபடங்களுடன் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகு தான் கட்டிடம் கட்ட வேண்டும்.
4. வாயிற்படிகள் வரை கதவு கைபிடிச்சுவர் லெதர் போட்டு பால்கனி முதலியவைகள் சொந்த இடத்திற்குட்பட்டு இருக்க வேண்டும். ஊராட்சி அல்லது அரசாங்க இடத்தில் யாதொரு விதமான ஆக்கிரமிப்புகள் செய்யக்கூடாது.
5. வரைபடத்தில் குறிப்பிட்டபடி சுகாதார முறையில் ஊராட்சியின் ஊழியர்கள் வருவதற்கு வசதியாக கழிப்பறை கட்டிக்கொள்ள வேண்டியது.
6. சமையலறை, குளியல் அறை முதலியவைகளுக்கு புகைபோக்கின் முதலியவைகள் போதியபடி அமைக்கவேண்டும்.
7. மேற்கூரைத் தண்ணீரை தகுதியான குழாய்கள் மூலம் ஊராட்சி வாறுகாலில் கொண்டு விடவேண்டும்.
8. சுகாதாரச் சட்டம் 20,35வது பிரிவின்படி ஊராட்சி மன்றம் தலைவரின் சான்றிதழ் வழங்கிய பின்பு தான் குடியேறவேண்டும்.
9. வேலை முடிந்த 15 நாட்களுக்குள் வேலை முடிந்த விபரத்தை தெரிவிக்க வேண்டும்.
10. குறிப்பிட்ட காலத்திற்குள் வேலை முடியாவிட்டால், காலாவதியாவதற்கு முன்பு உரிய கட்டணம் கட்டி, மனுச்செய்து உத்தரவு வாங்கும் முன் எவ்விதமான வேலையும் செய்யக் கூடாது.
11. மழைநீர் சேகரிப்பு அமைப்பு கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்.
12. இந்த உத்தரவு 1 வருடத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும். கட்டிட கட்டுமானப் பணி நிலுவை இருக்கை மீண்டும் 1 வருடத்திற்கு அனுமதி பெறவேண்டும்.

4/3/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

தனி அலுவலர்
வாகைக்குளம் கிராம ஊராட்சி

26.2.2020

இணைப்பு :

அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள்

பெறுநர் :

திரு / திருமதி நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியம் திருநெல்வேலி.

தலைவர்

ஊராட்சி மன்றம்



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate